கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 10.01.2025

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக திறந்தவெளி மற்றும் தொலைநிலைக்கல்வி பட்டமளிப்பு விழா 2025**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம் 2005–ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள உழவர்கள், மகளிர்கள், இளைஞர்கள், பள்ளிப்படிப்பை தொடர இயலாதவர்கள், சுயதொழில் முனைவோர்கள், கிராமங்களில் சிறுதொழில் தொடங்குவதில் ஆர்வமுள்ளவர்கள் ஆகியோர் தங்களின் தொழில்நுட்ப அறிவையும் அனுபவங்களையும் வளர்த்துக்கொள்ளும் வண்ணம் இவ்வியக்ககத்தின் வாயிலாக பல சான்றிதழ் பாடங்கள், வேளாண் இடுபொருள் பட்டயப்படிப்பு மற்றும் இதர பட்டயப்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2023-2024 –ஆம் ஆண்டிற்கான திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் பட்டயப்படிப்பு சான்றிதழ் வழங்கும் விழா 09.01.2025 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் இயக்குநர், முனைவர். ப.பாலசுப்ரமணியம் அவர்கள் இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களையும், பட்டம்பெற வருகைதந்த மாணவர்களையும் வரவேற்று அறிமுகவுரை வழங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மை இடுபொருள் கூட்டமைப்பின் மாநில தலைவர் திரு. M.மோகன் அவர்களும் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை இடுபொருள் கூட்டமைப்பின் மாநில செயலாளர் திரு. M. சத்தியமூர்த்தி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். மேலும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர். V.பாலசுப்ரமணி, அவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர். R. தமிழ்வேந்தன் அவர்களும் வாழ்த்துரை நல்கி இவ்விழாவினை சிறப்பித்தனர்.

இப்பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்ட முனைவர். முத்துபாண்டியன் அசோக்குமார், உதவி துணைவேந்தர் மற்றும் மெல்போன் குளோபல் மையத்தின் இயக்குநர், ஆஸ்திரேலியா (University of Melbourne) அவர்கள் சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர். வெ.கீதாலட்சுமி அவர்கள் தலைமையுரை ஆற்றி, திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் பாடத்திட்டங்களின் முக்கியத்துவங்கள் மற்றும் வேலைவாய்ப்புகள் பற்றி எடுத்துரைத்தார். இவ்விழாவில் துணைவேந்தர் அவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் பட்டம்பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் விருதுகளை வழங்கி சிறப்பித்தனர்.

திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக 2025 –ஆம் ஆண்டின் பட்டமளிப்பு விழாவில் 18 பயிற்சி மையங்களில் பயின்ற மாணவர்களில் **791** (567 ஆண்கள் மற்றும் 224 பெண்கள்) மாணவர்கள் பட்டயப்படிப்பு பட்டங்களைப் பெற்றனர். மதிப்பெண்களின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களை **74** (34 ஆண்கள் மற்றும் 40 பெண்கள்) மாணவர்கள் பிடித்துள்ளனர்.

இறுதியாக இவ்விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்த அனைவருக்கும் முனைவர். சே. லக்ஷ்மி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***